## பதுளை மாநகர சபை
## பதுளை மாவட்டம்

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டின் நிதிசார் கூற்றுக்கள் 2014 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 செப்டம்பர் 24 ஆந் திகதியன்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுமிருந்தன.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடு மற்றும் செயற்திறன் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சரால் பிரசுரிக்கப்பட்ட 2000 நவெம்பர் 22 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் ‘‘அ’’ பட்டோலை | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள அறுவை நிலையத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| இலக்கம் 371 | 1998 முதல் 2013 வரையான காலப்பகுதியின்போது 42 சந்தர்ப்பங்களில் பல்வேறு விடயங்களுக்காக பல்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,499,415 முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |

| | |
|---|---|
| (இ) இலங்கை குடியரசினது தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தினது 1:6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | சபையில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற சேவை நீங்கிய வேலை இடைநிறுத்தத்துக்குள்ளான 26 பேரிடமிருந்து 5 முதல் 14 ஆண்டு காலமாக அறவிடப்படாதிருக்கும் ஊழியர் கடனாகிய ரூபா 1,580,510 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

--------------------------------

### 2.1 வருவாய் நிர்வாகம்

----------------------------------------

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறு தீர்வை, வரி நிலுவைகளது அறவீடு ஏறக்குறைய 24 சதவீதமாக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் அறவிடப்படவிருந்த தொகை ஏறக்குறைய 49 சதவீதமான கீழான மட்டத்திலேயே அறவிடப்பட்டிருந்தது. அமைந்திருந்தது. ஏனைய வருவாய் விடயங்களின் கீழும் 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை அறவீடு 62 சதவீதத்திற்கும் குறைவாகவே அமைந்திருந்தது.

### 2.2 தீர்வையும் வரியும்

-------------------------------------

(அ) மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 237(1) ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், ஏதாவதொரு கட்டிடத்தின் அல்லது காணியின் வருடாந்தப் பெறுமதியில் தாக்கம் விளைவிக்கும் விதத்தில் அங்கு உருப்படி மாற்றம் ஏற்படுமிடத்து அவ்விடத்திற்கான புதிய மதிப்பிடு மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் தீர்வையும் வரியும் அறவிடப்பட வேண்டுமாயினும், 2013 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியின்போது வழங்கப்பட்ட 20 இணக்கச் சான்றிதழ்களின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடங்களது பெறுமதி மீதான தீர்வையும் வரியும் அறவிடப்படாது 2002 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அடிப்படையில் பழைய சொத்துக்களுக்கான பெறுமதியின் அடிப்படையில் தீர்வையும் வரியும் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த தீர்வையும் வரியும் ரூபா 36,322,029 ஆகும். மாநகரசபையால் கட்டளைச் சட்டத்தின் 252(1)(அ) பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை அறவிடப்படாதிருந்தது.

## 2.3 காணிகளைக் குத்தகைக்கு வழங்குதல்

---

(அ) சபைக்குச் சொந்தமான பதுளை கோப்பியாவத்தை வீதியில் அமைந்துள்ள 4.5 பர்ச்சஸ் காணியானது முறையான உடன்படிக்கை இல்லாது 1994 ஆம் ஆண்டில் ரூபா 5,600 வருடாந்தக் குத்தகைக்கு பதுளை மாவட்ட சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. சபையின் தீர்மானப்படி 1995 ஆண்டு தொடக்கம் திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாமலேயே மாதாந்தம் ரூபா 1,500 விதம் 2013 வரை வழங்கப்பட்டு 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 181 மாதங்களுக்கான ரூபா 310,162 வாடகை நிலுவை அறவிடப்படாதிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான பதுளை சைமன் பீரீஸ் மண்டபத்தின் ஒரு பகுதி 2000 ஜனவரி முதல் 15 ஆண்டகால குத்தகைக்கு ஊவா மாகாண நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரச சபை அலுவலகம் செயற்படுவதற்காக வழங்கப்பட்டிருந்தது. 2013 மே முதல் டிசெம்பர் வரை ரூபா 322,750 வாடகை நிலுவை அறவிடப்படாதிருந்தது.

(இ) பதுளை பஸ் தரிப்பிட ''சீ''கட்டிடத்தின் 57 ஆம் பிரிவு 2000 செப்டம்பர் 19 ஆந் திகதியன்று 50 ஆண்டு காலக் குத்தகைக்கு அரச மருத்தகங்கள் கூட்டுத்தாபனத்திற்குக் குத்தயைாக வழங்கப்பட்டிருந்தது. மேற்படி குத்தகை உடன்படிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் சபை தீர்வையை அறவிடவில்லை. அக் குத்தகை உடன்படிக்கையின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 ஒக்டோபரில் மாநகர ஆணையாளரின் அங்கீகாரத்துடன் கட்டிடமானது பிறிதொரு பிரிவினர்க்கு வழங்கப்பட்டிருந்தது. புதிய குத்தகையாளருடன் உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கோ அல்லது தீர்வையையும் வரியையும் அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான கட்டிடம் ஒன்று முறையான உடன்படிக்கையின்றி 1986 ஆம் ஆண்டில் உள்ளூராட்சித் திணைக்கள அலுவலகம் ஒன்றை நடாத்துவதற்காக மாதாந்தம் ரூபா 3,500 குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2014 மார்ச் வரை அவ்வாடகை மீளாய்வு செய்யப்படாது இருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான 20 பர்ச்சஸ் காணி ஒன்று 1987 ஆம் ஆண்டில் உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் குத்தகைக் கால முடிவு குறிப்பிடப்படாது இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 1987 ஆம் ஆண்டில் அறவீடு செய்த ரூபா 3,600 வருடாந்த குத்தகை வாடகை மீளாய்வு செய்யப்படாது 2014 ஆம் ஆண்டு வரை அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டவாறிருந்தது.

(ஊ) பதுளை மத்திய பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள 48. சீ இலக்க அறை முறையான உடன்படிக்கையின்றி தனியார் பஸ் கம்பனி ஒன்றிற்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான வாடகை நிலுவையாகிய ரூபா 132,848 அறவிடப்படாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

**சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

சபையானது புகையிரதத் திணைக்களத்திடமிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் தொடர்பாக அச்சொத்துக்கள் அமைந்துள்ள இடம், அவற்றின் சதுர அளவு என்பவற்றை இனங்காணாது 2011 முதல் 2013 பெப்ரவரி வரையான காலப் பகுதியின்போது குத்தகை வாடகையாகச் செலுத்திய தொகை ரூபா 1,399,752 ஆகும்.

மேற்படி குத்தகை வாடகையை வழங்கியவாறு அத்துமீறிக் குடியேறியோர் கட்டிடங்களை அமைத்து அவற்றைப் பயன்படுத்துவது 2013 ஆகஸ்ட் 5 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்